## October 19 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சீனாவில் நடைபெறும் வில்வித்தை உலகக் கோப்பை ஃபைனல் போட்டியில், இந்தியாவின் ஜோதி சுரேகாவெண்கலப் பதக்கம் வென்றார்.
   i. இந்தப் போட்டியில் காம்பவுண்ட் பிரிவில் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை அவர் படைத்தார்.
2. ஜூனியர் உலக பாட்மின்டன் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் தன்வி சர்மா இறுதி ஆட்டத்துக்கு முன்னேறினார்.
   i. இதன் மூலமாக போட்டியின் வரலாற்றில் இறுதி ஆட்டத்துக்கு முன்னேறிய 3-ஆவது இந்திய வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றார். இதற்கு முன் அபர்னா போபட், சாய்னா நெவால் ஆகியோர் இறுதிக்கு முன்னே றியது நினைவுகூரத்தக்கது.
3. தெலங்கானா உள்ளாட்சித் தேர்தலில் பிற்படுத்தப்பட்டோருக்கு (பிசி) 42 சதவீத இடஒதுக்கீடு அளிப்பதற்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த மாநிலத்தில் பந்த் நடைபெற்றது.
4. நாட்டின் முதல் உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் படேலின் 150-வது பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் ஜம்முவில் ஒரு ஒற்றுமைப் பேரணியை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் ஜிதேந்திர சிங் தொடங்கி வைத்தார்.
5. புதிய ஹெச்-1பி நுழைவு இசைவு (விசா) கட்டணத்தை ரூ.88 லட்சமாக (1 லட்சம் டாலர்) உயர்த்தும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான அரசு நிர்வாகத்துக்கு எதிராக அமெரிக்க வர்த்தக சபை வழக்கு தொடர்ந்துள்ளது.
   i. கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்தில் இதுதொடர்பான மனுவை அமெரிக்க வர்த்தக சபை தாக்கல் செய்தது.
   ii. அதில், 'டிரம்ப் நிர்வாகத்தின் இந்த முடிவு தவறான கொள்கை சட்ட விரோதமானது. அமெரிக்காவுக்குள் குடிமக்கள் அல்லாதவர்கள் நுழைவதற்கு கட்டுப்பாடுகளை விதிக்க அமெரிக்க அதிபருக்கு குறிப்பிட்ட அதிகாரம் உள்ளது. ஆனால், அந்த அதிகாரம் சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு, நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு நேரடி முரண்பாடாகவும் இருக்க முடியாது.
6. மேற்கு வங்கத்தில் டார்ஜீலிங் மலைகள், தராய் மற்றும் துவார்ஸ் பகுதிகளில் வசிக்கும் கூர்கா சமுதாயத்தினரின் பிரச்னைகளை விவாதிக்க, ஓய்வுபெற்ற ஐபிஎஸ் அதிகாரி பங்கஜ்குமார் சிங்கை மத்தியஸ்தராக நியமித்ததற்கு அதிருப்தி தெரிவித்து, பிரதமர் மோடிக்கு மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கடிதம் எழுதினார்.
   i. அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்ததாவது: டார்ஜீலிங் உள்ளிட்ட மாவட்டங்களை உள்ளடக்கி சுயாட்சி அமைப்பாக கூர்காலாந்து பிரதேச நிர்வாகம் (ஜிடிஏ) செயல்பட்டு வருகிறது. கூர்காக்களின் இன அடையாளத்தைப் பாதுகாக்கவும், அந்த பிரதேசத்தில் சமூக-பொருளாதார வளர்ச்சி உள்ளிட்டவற்றை உறுதி செய்யவும் ஜிடிஏ உருவாக்கப்பட்டது.
   ii. இந்நிலையில் டார்ஜீலிங் மலைகள், தராய் மற்றும் துவார்ஸ் பகுதிகளில் வசிக்கும் கூர்கா சமுதாயத்தினரின் பிரச்னைகளை விவாதிக்க, ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி பங்கஜ் குமார் சிங்கை மத்தியஸ்தராக மத்திய அரசு நியமித்துள்ளது. மேற்கு வங்க அரசுடன் எந்த வொரு ஆலோசனையும் மேற்கொள்ளாமல் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
   iii. இந்த விவகாரத்தில் தன்னிச்சையாக எடுக்கப்படும் எந்த வொரு முடிவும் அந்த பிரதேசத்தின் அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கு எதிராக இருக்கும். எனவே பங்கஜ்குமார் சிங்கின் நியமனத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கோரினார்.

7. நாட்டில் அதிகரித்து வரும் எண்ம கைது (டிஜிட்டல் அரஸ்ட்) மோசடிகளைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக பதிலளிக்குமாறு மத்திய அரசு மற்றும் மத்திய புலனாய்வு முகமைக்கு (சிபிஐ) நோட்டீஸ் பிறப்பித்து உச்சநீதி மன்றம் உத்தரவிட்டது.
   i. எண்ம கைது மூலம் ரூ.1.05 கோடியை மோசடியாளர்களிடம் இழந்த ஹரியாணா மாநிலம் அம்பாலாவைச் சேர்ந்த 73 வயது மூதாட்டி தலைமை நீதிபதி பி.ஆர். கவாய்க்கு எழுதிய கடிதத்தை, தானாக முன்வந்து வழக்காக பதிந்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் சூர்ய காந்த், ஜயமால்ய பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த நோட்டீஸைப் பிறப்பித்தது.
8. உத்தர பிரதேச மாநிலம், லக்னௌவில் பாதுகாப்புத் தொழில் வழித்தடத் திட்டத்தின்கீழ் அதிநவீன வசதிகளுடன் கட்டமைக்கப்பட்ட பிரமோஸ் ஏரோஸ்பேஸ் ஆலையில் முதலாவதாக தயாரிக்கப்பட்ட ஏவுகணைத் தொகுப்பை ஆயுதப்படைகளின் பயன்பாட்டுக்காக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், முதல்வர் யோகி ஆதித்யநாத் ஆகியோர் கொடியசைத் துத்தொடங்கிவைத்தனர்.
   i. லக்னௌவில் டைட்டானியம் மற்றும் சூப்பர்அலாய் உலோக உற்பத்தி ஆலையை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் திறந்துவைத்தார். அப்போது, பாதுகாப்பு, விண்வெளி, மின்னணுவியல் உள்ளிட்ட துறைகளில் பயன்படும் அரியவகை கனிமங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.
9. தேனி மாவட்டம், மூல வைகை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால், வைகை அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து அணை நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்ந்தது.
   i. ஆண்டிபட்டி வட்டம், வருஷநாடு மலைப் பகுதியில் நீர்பிடிப்பு பகுதியில உள்ள மூல வைகை ஆண்டிபட்டி வட்டம், வருஷநாடு பகுதியில் மூல வைகை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு. பலத்த மழையால் மூல வைகை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.
   ii. முல்லைப் பெரியாறு அணையிலிருந்து தமிழகப் பகுதிக்கு வினாடிக்கு 1,400 கன அடி வீதம் திறந்தவிடப்பட்ட தண்ணீர், மாவட்டத்தில் பரவலாக பெய்து வரும் மழையால் மூல வைகை ஆறு, முல்லைப் பெரியாறு, கொட்டகுடி ஆறு, வராகநதி ஆறு, காட்டாற்று ஓடைகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு ஆகியவற்றால் வைகை அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது.
   iii. வைகை அணை நீர்மட்டம் காலை 6 மணிக்கு 62.47 அடியாக இருந்தது (அணையின் மொத்த உயரம் 71 அடி). அப்போது அணைக்கு தண்ணீர் வரத்து வினாடிக்கு 2,268 கன அடியாக இருந்தது.
10. 'ரூல் கர்வ்' விதியைப் பின்பற்றி, முல்லைப் பெரியாறு அணையிலிருந்து கேரள மாநிலத்திலுள்ள இடுக்கி அணைக்கு வினாடிக்கு 7 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.
   i. வடகிழக்குப் பருவமழையால் முல்லைப் பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணைக்கு வெள்ளிக்கிழமை வினாடிக்கு 2,749 கன அடியாக இருந்த நீர்வரத்து, 17,828 கன அடியாக அதிகரித்தது.